FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS (Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129865

1. District : திருவாரூர் PS: V & AC Year: 2025 FIR No.: 2/25 Date: 16.5.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 2.5.2025 - காலை 07.00Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் Date to : திருவாரூர் தாயுக்கு அலுவலகம்
நாள் வரை
Time Period : Time from : 10.5.2025 - மாலை 12.00HRS
நேர அளவு நேரம் முதல் Time to : Through Cell Phone
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 13.5.2025 - காலை 11.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : திருவாரூர் தாயுக்கா அலுவலகம்
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 16.5.2025 - காலை 11.15 Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : Through Cell Phone
நேரம்
16.5.2025 - மாலை 12.00Hrs
16.5.2025 - மாலை 16.00Hrs

4. Type of Information : Written/ Oral : FIR
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : தாயுக்கா அலுவலகம், திருவாரூர்
முறைக் காவல் எண் முகவரி 5 KM கிழக்கு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. சிவசுப்பிரமணியன் (b) Father's/Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் கிபீர மரைக்கா
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு வயது 41 நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : வேலைபார்க்கும் இடம் (g) Address : 20/3, அரசனி தெற்கு தெரு, தென்ற சேரி, திருவாரூர்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. கார்த்திகேயன், இத பிரிவு, தாயுக்கா அலுவலகம்
திருவாரூர் வயது 41

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

(குற்ற எண்: 0

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி.சித்ரா ஆகிய நான் 16.05.2025-ந் தேதி மதியம் 12.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு. S.செல்வகணேஷ், த/பெ சுப்ரமணியன் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: S.செல்வகணேஷ் வயது-41, த/பெ சுப்ரமணியன், 20/8-அரசன்குளத்தெரு, திருவாரூர் தெற்குசேத்தி, திருவாரூர் நகரம், திருவாரூர் மாவட்டம். பெறுதல்: உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் திருவாரூர் நகரம், தெற்குசேத்தி, அரசன்குளத்தெருவில் எனது பாட்டி கமலா மற்றும் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் வடக்கு கொத்ததெருவில் சீதளாதேவி என்ற பெயரில் சொந்தமாக போட்டோ ஸ்டுடியோ நடத்தி வருகிறேன். எனது தாத்தா கடந்த 16.08.2017 அன்று

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S.Selvaganesh
16.05.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.R.CHITRA
Rank: நிலை Inspector of Police
No. எண்...
VAC Thiruvarur
16.5.2025

(குற்ற எண். 02/2025 FIR-ன் தொடர்ச்சி...,)

இறந்து விட்டார். திருவாரூர் நகரம், வடக்குசேத்தி வட்டம், வடக்குகொத்த தெருவில் நகரபுல எண்.1108-ல் 91.5 ச.மீ புஞ்சை நிலமும், புல எண்.1107-ல் 94.00 ச.மீ. புஞ்சை நிலமும் எனது தாத்தாவிற்கு பாகபிரிவினை மூலம் கிடைக்கப்பெற்று அவருக்கு பிறகு எனது பாட்டி கமலா பெயரில் இருந்து வருகிறது. திருவாரூர் சார்பதிவாளர் ஆவண எண்.2643/2023-ன் படி கடந்த 09.05.2023ஆம் தேதி புல எண்.1108-1A, புஞ்சை மனை பூரா 21 ச.மீ புகல் 14.68 ச.மீ. 158 ச.அடியை எனது பாட்டி கமலா எனக்கு தானசெட்டில்மென்ட் செய்து கொடுத்தார். அதில் புல எண்.1107 விடுப்பட்டதனால் பின்னர் பிழை திருத்த ஆவண எண். 5520/2023 நாள்:13.09.2023-ன் படி நகரபுல எண்.1108 ல் 11.76 ச.மீ. புஞ்சை நிலமும், புல எண்.1107ல் 20.93 ச.மீ. புஞ்சை நிலமும் பிழைதிருத்தம் செய்யப்பட்டது. அந்த இடமானது கூட்டுபட்டாவாக இருப்பதால் எனது பெயருக்கு உட்பிரிவு மாற்றம் செய்ய கடந்த 18.11.2023-ஆம் தேதி திருவாரூர் தாலுக்கா அலுவலகத்தில் மனு அளித்து டி.ஆர்.எண்.2023/20/01/001080SD நாள்:29.11.2023-ன் படி உட்பிரிவு மாற்றம் செய்து பட்டா ஆணை வழங்கினார்கள். அவ்வாணையில் உட்பிரிவு மாற்றம் செய்யப்பட்டு 1108/3-ல் 21.0 ச.மீ.-ம், 1107/2-ல் 11.5 ச.மீ.-ம் பத்திரத்தில் உள்ள அளவு படி இல்லாமல், தவறாக எனது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக நான் கடந்த 2024 ஏப்ரல் மாதம் திருவாரூர் தாலுக்கா அலுவலகத்தில் சென்று கேட்டபோது, இது தொடர்பாக வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்குமாறு கூறினார்கள். அதன்படி நான் கடந்த 22.04.2024-ம் தேதி திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று பட்டாவில் குறிப்பிட்டுள்ள பரப்பை திருத்தம் செய்து வழங்க மனு கொடுத்தேன். வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் எனது மனு தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை வழங்க ந.க.1412/2024/அ2, நாள்:14.06.2024-ன் படி திருவாரூர் வட்டாட்சியருக்கு குறிப்பாணை வழங்கினார். அதன் நகல் எனக்கு வழங்கினார்கள். இது தொடர்பாக திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் திருவாரூர் தாலுக்கா அலுவலகத்தில் பட்டாமாற்றம் தொடர்பான பிரிவில் இருந்த அலுவலரை சென்று பார்த்தேன். அவர் தங்களுடைய மனு என்னிடம்தான் உள்ளது. தங்களுடைய போன் நம்பரை கொடுத்துவிட்டு போங்க பின்னர் உங்களுக்கு என்னுடைய

(குற்ற எண். 02/2025 FIR-ன் தொடர்ச்சி...,)

செல்போனிலிருந்து தகவல் சொல்கிறேன் என்று தெரிவித்து என்னை அனுப்பி வைத்தார். அதன் பின்னர் 02.05.2025ஆம் தேதி என்னுடைய அலைபேசி எண்.9751203024-க்கு 9025842844 என்ற அலைபேசி எண்ணிலிருந்து போன்செய்தவர் திருவாரூர் தாலுக்கா அலுவலக பட்டா திருத்தம் செய்யும் பிரிவிலிருந்து பேசுவதாகவும், தங்களுடைய பட்டா திருத்தம் தொடர்பாக இரவு 07.00 மணிக்கு திருவாரூர் தாலுக்கா அலுவலகம் வந்து தன்னை பார்க்குமாறு தெரிவித்தார். அதன்படி நான் 02.05.2025 ந் தேதி இரவு சுமார் 7 மணி அளவில் திருவாரூர் தாலுக்கா அலுவலகம் சென்று அவரை பார்த்தபோது, உங்கள் மனு தொடர்பாக பரப்பு சரிசெய்து தாசில்தாரிடம் கையொப்பம் பெற்று பட்டா வழங்க ரூ.15,000/- எனக்கு கொடுங்கள் என்று லஞ்சமாக கேட்டார். நான் அவருடைய பெயரை கேட்டேன். அதற்கு பெயர் எதற்கு என்றார், தாங்கள் இல்லாதபோது பெயர் தெரியாமல் சார் எங்க என்று கேட்டேன் என்று கூறினேன். அதற்கு அவர் B3 Section சார் என்று கேளுங்கள் சொல்வார்கள் என்று தெரிவித்தார். தற்போது என்னிடம் பணம் இல்லை பின்னர் வருகிறேன் என்று கூறி வந்துவிட்டேன். பின்னர் நான் வெளியில் வந்து B3 Section சார் பெயர் என்ன என்று விசாரித்தில் அவர் பெயர் திரு.ஜான்டைசன் என்று தெரிந்துகொண்டேன். பின்னர் 10.05.2025-ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு திரு.ஜான்டைசன் எனக்கு போன்செய்து பட்டா திருத்தத்திற்கு தங்களிடம் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் வெளியூரில் இருக்கிறேன், வந்து பார்க்கிறேன் என்று கூறவே போனை வைத்துவிட்டார். பின்னர் 13.05.2025-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு மீண்டும் திருவாரூர் தாலுக்கா அலுவலகம் சென்று திரு.ஜான்டைசனை பார்த்து மனு தொடர்பாக கேட்டதற்கு, நான் கேட்ட ரூ.15,000/- லஞ்சமாக எடுத்து வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் அவ்வளவு தொகை என்னிடம் இல்லை, தொகையை குறைத்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர், பட்டா திருத்தத்திற்கு ரூ.25,000/- வாங்குவேன். உங்களுக்குதான் ரூ.15,000/- சொல்லியிருக்கிறேன். அதனால் ரூ.15,000/- தயார் செய்து கொண்டு வாங்க பட்டா திருத்தம் செய்து தருகிறேன் என்று தெரிவித்தார். அதற்கு நான் சரிசார், பணத்துடன் வரும் வெள்ளிக்கிழமை வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் வெள்ளிக்கிழமை வேண்டாம், சனிக்கிழமை பணத்துடன் வாருங்கள் என்று தெரிவித்தார்.

(குற்ற எண். 02/2025 FIR-ன் தொடர்ச்சி...,)

பின்னர் 16.05.2025ஆம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு ஜான்டைசனுக்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை, பின்னர் சுமார் 11.15 மணிக்கு அவரே எனக்கு போன் செய்தார். அவரிடம் எனது பட்டா திருத்தம் தொடர்பாக கேட்டதற்கு நாளை சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு நான் கேட்ட லஞ்ச பணம் ரூ. 15,000/-த்தை எடுத்துக்கொண்டு வாங்கள். உங்கள் பட்டாவை தயார்செய்து தருகிறேன் என்று தெரிவித்தார். பட்டாவில் திருத்தம் செய்வதற்கு திருவாரூர் தாலுக்கா அலுவலக B3-பிரிவு அலுவலர் ஜான்டைசன் லஞ்சமாக கேட்ட ரு.15,000/- பணத்தைகொடுக்க எனக்கு விருப்பமில்லை. மேலும் பட்டாவில் திருத்தம் செய்து கொடுக்க பல முறை என்னை அலையவிட்டதனால் மிகுந்த நான் மனஉளைச்சலுக்கு ஆளானேன். எனவே மேற்படி நபர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு, அவர் லஞ்சமாக கேட்ட ரு.15,000/- பணத்துடன் 16.05.2025-ந் தேதி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். புகாருடன் தானசெட்டில்மென்ட் ஆவண எண்.2643/2023, பிழைதிருத்த ஆவண எண்.5520/2023, உட்பிரிவு பட்டா மாறுதல் ஆணை நகல்-டி.ஆர்.எண்.2023/20/01/001080SD நாள்:29.11.2023, திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக ந.க.எண்.1412/2024/அ2, நாள்:14.06.2024, சர்வே எண்.1107/2, 1108/3-ஆகிய புல எண்களுக்கான ஆன்லைன் பட்டா ஆகியவற்றின் நகல்களை இணைத்து கொடுக்கிறேன். திருவாரூர் தாலுக்கா அலுவலக அலுவலர் ஜான்டைசன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd (XXXXXX) (S.SELVAGANESH) 16.05.2025. Sir, computer typed tamil petition is received from Tr.S.Selvaganesh on 16.05.25 at 12.00 hrs and perused. In this connection, Tmt.G.R.Chitra, Inspr. of Police, V&AC Thiruvarur is instructed to verify the content of this petition and the reputation of the suspect officer and proceed further as per law. Sd (XXXXXX) DSP, V&AC, TVR. அய்யா, இன்று 16.5.2025 ந் தேதி 12.00 மணிக்கு வாதி அளித்த புகாரின் பேரில் உத்தரவுபடி ஒரு ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதில் புகாரின் தன்மை உண்மையெனவும், எதிரியின் நடவடிக்கை சர்ச்சைகுரியது என்றும் ரகசிய விசாரணையில் தெரிய வருகிறது. எனவே 16.05.2025 ந் தேதி 16.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.

(குற்ற எண். 02/2025 **FIR**-ன் தொடர்ச்சி...,)

2/2025 ச/பி 7of Prevention of Corruption Act 1988 as amended 2018 ன் படி எதிரி திரு.ஜான்டைசன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) (G.R.CHITRA) Inspector of Police, V&AC TVR 16/5/2025.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

INSPECTOR 16/5/2025
VIGILANCE AND ANTI CORRUPTION,
THIRUVARUR.
16/5/2025